# அரசியல் தீர்வு பேச்சு பெப்ரவரியில் நடைபெறும்

## கேணல் ரத்வத்த

(கொழும்பு)
இன்று அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறவுள்ள பேச்சு வார்த்தையில் அடிப்படை அரசியல் விவகாரம் தொடர்பான பேச்சுவார்த்தைகளை எதிர் வரும் பெப்ரவரி மாதம் முதல் வாரத்தில் தொடங்கலாமென்று அரசு முன்மொழியவிருக்கிறது.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த இவ்வாறு தெரிவித்துள்ளார்.

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 மார்கழி 30 இதழ் 344
..ழ்ப்பாணம் சனிக்கிழமை 14-1-1995

## ஆனையிறவு பூநகரிப் [illegible]தை [illegible]றப்பு பற்றி ஆராயப்படும்

(கொழும்பு)
விடுதலைப்புலிகளுடன்இன்று நடைபெறும் பேச்சுவார்த்தைகளின் போது பூநகரி-ஆனையிறவுப்பாதைகள் திறப்பது பற்றிய கருத்துக்கள் ..ரிமாறப்படும் என்று பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த தெரிவித்தார்.

அரசு புலிகள் மூன்றும் கட்டப்பேச்சுவார்த்தைகள் தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு கூறினர்.

யாழ்ப்பாணத்தில் புனரா

(4ம் பக்கம் பார்க்க)

## ★ மூன்றும் கட்ட பேச்சு இன்று நடைபெறும்

# பொருளாதார தடையை முற்றாக நீக்க புலிகள் வலியுறுத்துவர்

## பாதை திறப்பும் ஆராயப்படும்

[யாழ்ப்பாணம்]
அரசு பிரதி நிதிகளுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இன்று நடைபெறவுள்ள மூன்றும் கட்டப்பேச்சுவார்த்தைகளின் போது தமிழ் மக்கள் எதிர் நோக்கும் மிக முக்கிய பிரச்னையான பொருளாதார தடையைநீக்குவதுதொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளால் முக்கியமாக வலியுறுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பொருளாதார தடை அரசாங்கத்திஞல் ஒரளவு நீக்கப்பட்டுள்ள போதிலும் தடையை பூரணமாக நீக்குவ தன் மூலமே தமிழ் மக்களின் முக்கிய பிரச்னை தீர்வுக்கு வழி அத் கோலுமென விடுதலைப்புலிகள் தரப்பினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது,

போக்குவரத்து பாதை திறப்பு,, போர் இடைநிறுத்

(4-ம் பக்கம் பார்க்க)

## அரசியல் அதிகார பேச்சில் அமைச்சர்கள் பங்கேற்பர்

(கொழும்பு)
விடுதலைப்புலிகள் பிரதிநிதிகளுக்கும் அரச பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெறவுள்ள அரசியல் அதிகாரம் தொடர்பான பேச்சு வார்த்தையின்போது அரச தரப்பில் அமைச்சரவை மட்டத்தில் உறுப்பினர்கள்கலந்து கொள்ளவுள்ளதாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேர்

(4-ம் பக்கம் பார்க்க)

## அரசு புலிகள் விவகாரம் சி.என்.என். ஒளிபரப்பியது

[கொழும்பு]
விடுதலைப் புலிகளுடன் ஸ்ரீலங்கா அரசு மோதல் நிறுத்த உடன்படிக்கை செய்து கொள்வதுபற்றியும் பதினெரு வருடகால போருக்கு முடிவு கட்ட அரசு மேற்கொண்டுள்ள சமாதான முயற்சிகள் குறித்தும் நேற்று 'சி. என். என்.' செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

நோர்வே நாட்டு கண்காணிப்புக்குழு பிரதிநிதிகளுடன் ஜனதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா சந்தித்து நடத்திய பேச்சுவார்த்தை சம்பந்தமான படங்களும் சி. என். என். தொலைக்காட்சி செய்தியில் காண்பிக்கப்

(4ம் பக்கம் பார்க்க)

## கிளாலி-பூநகரி படகுசேவை

(யாழ்ப்பாணம்)
கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று சனிக்கிழமை வழமையான நேரத்துக்கு நடைபெறுமென விடுதலைப்புலிகள் அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## மட்டு. வாகரை முகாமில் புலிகள் ராணுவம் சந்திப்பு

(மட்டக்களப்பு
மட்டக்களப்பு வாகரை இராணுவ முகாமுக்கு ஹெலிகொப்டரில் நேற்று முன் தினம் சென்ற இராணுவ அதிகாரிகள் விடுதலைப் புலிப் பிரமுகர்களை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தினர்

இராணு தரப்பில் மேஜர் ஆராய்ச்சி, கேணல் எக்கடகொல, கேணல் விஜயசேகர, கேணல் பிரேமஸ்ரீ, கேணல் மனேபீரிஸ் ஆகியோரும் விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலன், மட்டு-அம்பாறை தளபதி ராம்,

(4-ம பக்கம் பார்க்க)

## கண்காணிப்பு குழுக்கள் நான்காக குறைப்பு

(கொழும்பு)
அரசு படைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான மோதல் தவிர்ப்பை கண்காணிப்பதற்கு நியமிக்கப்படவிருந்த ஆறு குழுக்களுக்குப் பதிலாக நான்கு குழுக்கள் அமைக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பாக அரசும் விடுதலைப்புலிகளும் இணக்கம் காணப்பட்டதை அடுத்தே இந்த நான்கு குழுக்களும் இவ்வார இறுதிக்குள் அமைக்கப்படும் என்றும் தெரிவிக்கப் படுகிறது, -ரி

## வடபகுதி அபிவிருத்திக்கு செயலணிக்குழு நியமனம்!

(கொழும்பு)
யுத்தத்திஞல் பாதிக்கப்பட்ட வடபகுதியை மீண்டும் கட்டி எழுப்புவதற்கான திட்டம்ஒன்றுதயாரிக்கப்படவுள்ளதாக அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா தெரிவித்துள்ளார்.

அவர் இதுதொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,-

மேற்படி அபிவிருத்தி திட்டத்தை செயற்படுத்துவதற்காக செயலணிக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் இக்குழுவின் முதலாவது கூட்டம் ஜனதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்றதாகவும்

(4-ம் பக்கம் பார்க்க)

## அரசியல்' தீர்வு விடயமும் இன்றையபேச்சில்'இடம்பெறும்

(கொழும்பு)
விடுதலைப்புலிகளுக்கும் அரச பிரதிநிதிகளுக் கும்இடையில் இன்று நடைபெறும் பேச்சு வார்த்தையின்போது வடபகுதியின் புனர்வாழ்வு, புனர் நிர்மாண நடவடிக்கைகள் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை நீடிப்பதற்கான வழிவகைகள், மற்றும் இனப்பிரச்னையை தீர்த்துவைக்கும் அரசியல் தீர்வு தொடர்பான பேச்சு வார்த்தைகள் நடாத்தல் போன்றவிடயங்கள் ஆராயப்படவுள்ளதாக பிரதி பாதுகாப்பமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றுகையில் மேற்கண்ட விபரங்களை தெரிவிக்கையில்

இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வுத்திட்டத்தை அரசாங்கம் தற்போது தயாரித்து வருவதாகவும் அடுத்த மாதம்

(4ம் பக்கம் பார்க்க)

## ஜே.ஆர். சந்திரிகா நேற்று சந்திப்பு

[கொழும்பு[
முன்னுள் ஜனதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தன ஜனதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவை நேற்று சந்தித்தார். இது ஒரு சிநேகபூர்வமான சந்திப்பு என தெரிவிக்கப்பட்டது.

(4ம் பக்கம் பார்க்க

வரி விளம்பரம்

FOR SALE

Good condition piano Monington & weston England one owner. T. Ganeshan Piano Tuncr 4th Mile Post, Main street, Manipay. C 1372

## இன்று

[கொழும்புத்துறை]
யாழ்.அரியாலை சுதேசியதிருநாட் கொண்டாட்ட புதுவருடத்தின் பொதுச்சபைக் கூட்டம் யாழ்.செயலகத்திட்டமிடல் பணிப்பாளர் திரு. பத்மநாதன் தலைமையில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்குயாழ் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மண்டபத்தில் இடம் பெறும். - 1540 0

(யாழ்ப்பாணம்)
திருநெல்வேலிவாலையம்மன் ச. ச. நிலைய 530வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு முன்னேடி நிகழ்ச்சியாக இன்று சனியும் நாளை ஞாயிறும் யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரி மண்டபத்தில் கண்காட்சி நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் விடுதலைப் போராட்ட வரலாற்றுப் படங்களும்நிலைய வரலாற்றுச் சான்றுகளும்கிராம மக்களின் கைவினை ஆக்கங்களும் காண்பிக்கப்பட உள்ளன. இந் நிகழ்வினை யாழ். பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.சி. சிவலிங்கராஜா இன்று சனி காலை 9-30 மணிக்கு திறந்து வைப்பார்.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995—01—14**
**சனி இரவு**

08-01 சொல்லுங்கள் பார்க்கலாம்
08-10 தாயகப் பாடல்கள்
08-20 உழைப்போம் உயர்வோம் - நிகழ்ச்சியில் ''தேச நிர்மாணிகள்'' உரைச்சித்திரம்
08-30 செய்திகள்
08-40 அரசியல் அரங்கம்- வே. பாலகுமாரன் எழுதிய ''செச்சென் யாவும் மேஜர் ஜெனரல் லக்கி அல்கமவும்''
08-50 வாத்திய கானங்கள்
09-00 இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

**1995—01—15**
**ஞாயிறு காலை**

07-02 மாவீர வணக்கம்
07-15 நீங்கள் கேட்டவை
07-30 செய்திகள்
C7-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
08-00 காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995-01—14**
**சனி மாலை**

05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சிக் கீதம்
05-10 புதியவை
05-15 வேங்கையின் நெஞ்சம்
05-30 அறிவியல் விஞடி விஞ போட்டி- நிகழ்ச்சியில யா/சாவகச்சேரி றிபேக் கல்லூரி, யா/நாவற்குழி மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் இரண்டாவது சுற்று
06-00 சிந்தனைக்கு சில விஞடிகள்
06-02 பாமாலை
06-15 என் தெரிவு
06-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

## லேக்கவுஸின் புதிய தலைவர் நியமனம்

(கொழும்பு)
லேக்கவுஸின் புதிய தலைவராக திரு. லகஸ்மன் ஜயவர்த்தன நியமிக்சப்பட்டுள்ளார்.
லேக்ஹவுஸின் தலைவராக இருந்த திரு லயனல் பெர்ணண்டோ தமது பதவியை இராஜினுமா செய்ததை தொடர்ந்து அவரின் இடத்துக்கே லக்ஸ்மன் ஜயவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார். (ம-சி)

## பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)
மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் புனரமைக்கப்பட்ட பிரதான மண்டபத் திறப்பு விழாவும், பொங்கல் விழாவும் நாளை ஞாயிறு காலை 10 மணிக்கு பாடசாலை அதிபர் திரு. கி. சிவமணி தலைமையில் நடைபெறவுள்ளது, பிரதம விருந்தினராக சங்கானைக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. விக்கினேஸ்வரன் கலந்துகொள்வார். சிறப்பு நிசுழ்ச்சியாக யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு. த. சிவகுமாரன் 'பொங்கும் மங்கலம்' எனும் தலைப்பில் சிறப்புரையாற்றுவார். கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

## ★ கொழும்பில் தினமும் ஒன்றரை கோடி ரூபாவிற்கு போதைபொருட்கள் விற்பனை

(கொழும்பு)
கொழும்பிலும் அதன் சுற்றுப்புறப் பிரதேசங்களிலும் நாளொன்றுக்கு 1 கோடியே 50 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதை வஸ்து விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.
போதை வஸ்துக் கடத்தலுக்கு மரணதண்டனை விதிக்கக்கூடிய சட்டங்கள் இருக்கின்றபோதும் அதை மீறிப் பலகோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் நாட்டுக்குள் கடத்தப்படுகின்றதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.
அண்மைக் காலமாக நாட்டில் போதை வஸ்த்துப் பாவனை பெருமளவில் அதிகரித்துள்ளதாக பொலிசார் கூறியுள்ளனர். இதனைக் கட்டுப்படுத்த பல நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றபோதும் போதை வஸ்துப் பாவனை அதிகரித்து வருவதையடுத்து பொலிசார் கவலை தெரிவித்துள்ளனர்.
உயர்மட்ட பிரசைகளின் பாவனையிலிருந்த போதை வஸ்துப் பாவனை நடுத்தர வர்க்க இளைஞர் யுவதிகளிடமும் பரவியுள்ளதாக புள்ளி விபரம் ஒன்று தெரிவிக்கிறது. இலங்கைக்குள் போதை வஸ்து - இந்தியா, பாகிஸ்தான் பங்களாதேஷிலிருந்தே கூடுதலாக கடத்தப்படுவதாகவும் பொலிசார் கூறுகின்றனர்.
போதைவஸ்துப் பாவனையின் எதிர்விளைவுகள் குறித்து கொழும்பில் பல தொண்டர் நிறுவனங்கள் விளக்கிக் கூறி வருவதுடன் இதனுல் இளம் சமுதாயம் அழிந்துவிடும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் எச்சரித்துள்ளது.
கொழும்பில் பாடசாலை மாணவர் மத்தியிலும் போதை வஸ்துப் பாவனை அதிகரித்துள்ளதாக கல்வித் திணைக்களமும் கூறியுள்ளது. போதை வஸ்துப் பாவனை அதிகரிப்பால் கொலை கொள்ளை பலாத்காரம் உட்பட தெற்கில் வன்முறைகளும் பெருமளவில் அதிகரித்திருப்பதாக பொலிசார் கூறியுள்ளனர். -ம-சி

## 80ல் வேலையிழந்த 2000 தொழிலாளருக்கு மீண்டும் வேலை

(கொழும்பு)
1980ம் ஆண்டு வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வேலை இழந்தவர்கள் அரசாங்க, கூட்டுத்தாபனங்களில் அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனா.
இதற்கான சுற்றுநிருபம் ஒன்று, பொது நிர்வாக அமைச்சரினுல் அமைச்சுக்களுக்கும், திணைக்களங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
இதன் பிரகாரம் 2,000 ஊழியர்கள் மீண்டுல் வேலைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட உள்ளனர். ம-சி

## ராணுவம் - புலிகள் முல்லையில் சந்திப்பு

[யாழ்ப்பாணம்]
முல்லை மாவட்டத்தில் இராணுவத் தளபதிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமான சந்திப்பு நேற்று முனதினம் காலை இடம்பெற்றதாக அறிவிக்கப்படுகிறது.
விடுதலைப் புலிகள் தரப்பில் முல்லை மாவட்ட தளபதி சருபன் உட்பட ஐவர் இராணுவத் தளபதிகளைச் சந்தித்தனர். இராணுவ தரப்பில் பிரிகேடியர் டராான்கப்டன் தமகே உட்பட ஐவர் கலந்துகொண்டனர்.
இதேபோன்று ஏற்கனவே மட்டக்களப்பு, திருமலையிலும் புலிகள் - இராணுவத்தினர் சந்தித்துள்ளனர். -சிம-

## தொழிலாளர் பிரச்னைக்கு 'மே'க்கு முன் தீர்வு

(கொழும்பு)
அடுத்த மே மாதத்திற்கு முன்பு நாட்டில் உள்ள தொழிலாளர்களின் பிரச்னைகள் ஒரு முடிவுக்குக் கொண்டுவரப்படும் என்று கைத்தொழில் அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
தற்பொழுது தொழிலாளர்கள் தங்கள் அடிப்படைப் பிரச்னைகளைத் தீர்த்துவைக்குமாறு கோரிக்கைகளை விடுத்து வேலைநிறுத்தங்களில் ஈடுபட்டு வருவதையிட்டே கைத்தொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
எனினும் தொழிலாளர்கள் மத்தியில் தினமும் அமைதியின்மையே காணப்படுகிறது. தொழிலாளர்களின் பிரச்னைகளைப் பொலிஸாரின் பலம் மூலம் அடக்க அரசு முனைகிறது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. ம-சி

## சமாதான சக்திகளாக கலைத்துறையினர்உள்ளனர்

(கொழும்பு)
நாட்டில் சமாதான நடவடிக்கைகளை உறுதிப்படுத்துவதில் அரசியல்வாதிகளைவிட கலைத்துறையில் உள்ளவர்கள் கூடுதல் சக்தி கொண்டவர்களாகவிளங்குகிருர்கள் என்று ஜனுதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.
கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேசமண்டபத்தில் நடந்த சாகித்திய விழாவிலே இவ்வாறு அவர் தெரிவித்தார்.
அவர் மேலும் கூறியதாவது; கலைத்துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் மக்களை இலகுவில் இனவாதத்தில் இருந்து திசை திருப்பி அவர்களை சாதானத்துக்கான சரியான பாதையில் வழி நடத்தமுடியும் என்ருர். (ம-சி)

## புலவர் கல்விப் புலமைப் பரிசில்

(கொழும்பு)
தமிழ்நாடு பல்கலைக்கழகக் கல்லூரி ஒன்றில் இலங்கையிலுள்ள தகுதி வாய்ந்த மாணவர் ஒருவர் புலவர் தேர்வுக்காக நான்கு ஆண்டுகள் கற்று அவ்விருதைப் பெறுவதற்கு கொழும்புத் தமிழ்ச் சங்கம் நிதியுதவி வழங்க உள்ளது. இப்புலவர் பயிற்சிநெறியை மேற்கொள்ள விரும்புபவர் இலங்கையில் க. பொ. த உயர்தரத் தேர்வில் 4 பாடங்களில் சித்தி பெற்றவராகவும், சித்தி பெற்ற 4 பாடங்களுள் தமிழ் மொழியும் ஒன்ருக உள்ளவராகவும், தமிழில் ஆர்வமும் நற்பண்புகள் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
க. பொ. த உயர்தரச் சித்திபெற்ற கல்லூரி அதிபரதும், தகுதி வாய்ந்த அறிஞர் ஒருவரதும் நற்சான்றுகளோடு 1995 ஜனவரி 15-ம் நாளுக்கு முன் பொதுச் செயலாளர், 7, 57-ஆம் ஒழுங்கை, கொழும்பு-6 என்னும் முகவரிக்கு விண்ணப்பம் செய்தல் வேண்டும். விண்ணப்பம் செய்தவர்களுள் தகுதியான ஒருவர் நேர்முகத் தேர்வின் மூலம் தெரிவுசெய்யப்படுவர். தெரிவு செய்யப்படுபவர் 1995 ஏப்ரல் மாதம் முதல் தமிழகப் பல்கலைக் கழகக் கல்லூரி ஒன்றில் இப் பயிற்சி நெறியில் சேர்ந்து கற்க ஆயத்தமாக இருத்தல் வேண்டும். இச்சங்கம் உரிய உதவிகளை வழங்கும். வெளி நாட்டில் உள்ள தமிழறிஞர் ஒருவர் இக்கல்வி நெறிக்கான நிதியை வழங்கவுள்ளார். -சி



## 9-ம் ஆண்டு நினைவஞ்சலி

உற்பவம்:
08—10—1960



நற்பதம்:
25—12—1985

திதி: 14—01—1995
திரயோதசி

**செல்வி**
**தங்கபூமதி முத்துவேல்**

''கயிலை உறைமலை அரசனின் பாதமலரடி பெற்று
பூரண நித்திய சாந்திபெற வணங்குகின்ருேம்
நீங்கள் எம்மை விட்டு நீங்கி ஆண்டுகள் 9 சென்ருலும்
உங்கள் நினைவுகள் என்றும் எம்மைவிட்டு அகலாது
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்ருேம்

பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, தம்பி, மைத்துனி,
மாமா, மாமி, சகோதரர்கள்
மருமக்கள், உற்ருர், உறவினர்கள்.

''பதி பவனம்''
சந்நிதி வீதி,
உடுப்பிட்டி.

(சி 4688)

### மணிவாக்கு

ஒரு விளக்கின் சுடர் அணைந்து போகாமல் எரிந்துகொண்டு இருந்தால்தான், அது இன்னொரு விளக்கை ஏற்றி வைக்க முடியும். அதைப்போலவே ஆசிரியராக இருப்பவர் மேலும் மேலும் கல்வி அறிவு பெற்றுக்கொண்டிருந்தால்தான் மாணக்கர்களுக்குப்போதிக்க முடியும். — தாகூர்.

## நமது நோக்கு

### ஓடுவது ஏன்?

“வருமான வரி செலுத்தத் தவறிய 250 பேரின் கடவுச் சீட்டுக்கள் பறிமுதல் செய்யப்பட்டிருந்தன. அப்படியிருந்தும் வெளிநாட்டுக் கோடீஸ்வரர் நாட்டிலிருந்து தப்பிச் சென்றுவிட்டார்! —இது செய்தி.

இச்செய்தியிலிருந்து நாம் படிக்க வேண்டிய பாடங்களோ பல.

கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு இக்கோடீஸ்வரர் பற்றி அறிவித்திருந்தும் அவர் எப்படிப் போனார்? ஊழல்களும், நிர்வாகச் சீர்கேடுகளும் எந்தளவிற்கு ஊறிப் பரவியுள்ளன என்பதற்கு இது நல்ல உதாரணம்.

உலகப் போட்டிச் சந்தைக்கு எமது நாட்டையும் திறந்துவிட்டு, அதை ஒரு பெருமையான காரியம் எனப் பறைசாற்றிக் கொண்டிருக்கிறார்கள் சிலர்.

ஆனால் — நன்மைகள் சில கிடைத்தாலும், நாடு எவ்வாறெல்லாம் சுரண்டப்பட்டிருக்கிறது, சிலர் எப்படியெல்லாம்கோடீஸ்வரர்களானார்கள் என்பன ஆராய்வது மிக முக்கியம்.

ஏனெனில் —தொழிலாளர்களின் உழைப்பு சுரண்டப்பட்டிருக்கிறது. பல் தேசியக் கம்பனிகள் சிலவற்றின் விளம்பர உத்திகளால், தரமற்றபொருட்கள் கூட மக்கள் மீது திணிக்கப்பட்டு, அவர்களின் வருமானம் சுரண்டப்பட்டிருக்கிறது.

உதவிக்காக கையேந்தி நின்ற ஆட்சியினால் இவற்றை எல்லாம் தட்டிக் கேட்கமுடியவில்லை.

அத்தோடு — பொது மக்கள் எதிர்கால வாழ்க்கைக்கெனச் சிறு சிறு தொகைகளாகச் சேமித்து வங்கிகளிலும்,, நிறுவனங்களிலும் போட்டிட, ஆட்சியினர் இராணுவச் செலவிற்கு எடுத்திட, வேறு சிலர் சொந்தச் செலவுக்கு மாற்றிட, போட்டது போனதாகுமோ என மக்கள் ஏங்கிய நிலையும் நிலவியது.

திறந்த பொருளாதாரத்தால் ஏற்பட்ட தீய விளைவுகள் பற்றியும் விசாரிக்க அரசு முன்வரவேண்டும்.

நாட்டைச் சுரண்டியவர்கள் நாட்டை விட்டு ஓடுவதேன்? நிலவுக்கு ஒளித்துப் பரதேசம் போகிறார்கள்.

அறம் கூற்றாகும் என்பதை இவர்கள் மறந்துவிட்டார்களா?

# வெளிநாடுகளில் வாழும் ஈழத் தமிழர்கள் தாயகம் திரும்புவதை விரும்புகிறார்கள்

## ஆத்மஜோதி முத்தையா தகவல்

ஈழத்தின் இந்நூற்றுண்டின் ஆத்மீகத்தலைவர்களில் ஒருவரான ஆத்மஜோதி திரு. நா. முத்தையா அண்மையில் இந்தியா, சிங்கப்பூர் இந்தோனேசியா, சுவிஸ். கனடா, அமெரிக்காபோன்ற நாடுகளுக்கு ஆத்மீகச்சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டு அதை நிறைவு செய்து அண்மையில்தாயகம் திரும்பியுள்ளார் சுமார் 8 மாதகால பயணம் பற்றி அவர் தெரிவித்ததாவது;

மக்கள் மத்தியில் ஆத்மீக நெறியைப் பரப்பும் நோக்காக எனது பயணம் அமைந்திருந்து. குடும்ப வழிபாடு, வீட்டுவழிபாடு, கூட்டுவழிபாடு, அந்தர்யோகம், சற்சங்கம் போன்றவழிமுறைகளால் அங்கு சாதனையையும் ஒரு எழுச்சியையும் ஏற்படுத்த முடிந்தது. ஆத்மீகம் தொடர்பான சந்தேகங்களை கேட்டறிதல் (சற்சங்கம்] இதையே வெளிநாடுகளில் அங்குமுள்ளவர்கள் பெரிதும் விரும்புகின்றார்கள்.

### சைவசித்தாந்த பெருவிழா

கனடாவில் ரொறன்ரோ ஒட்டாவா மொன்றியல் ஆகியபகுதிகளில் பத்துநாட்கள் அண்மையில் சைவசித்தாந்தப் பெருவிழா நடைபெற்றது. ஈழத்தின் பல எழுத்தாளர்களும், கல்விமான்களும், சைவ சித்தாந்த தொன்மையை கடைப்பிடிப்பவர்களும் மற்றும் பலரும் கலந்து கொண்டனர். பல பாகங்களில் இருந்தும் நூற்றுக்கணக்கான பேராளர்கள் கலந்து கொண்ட இம்மாநாட்டில் சைவசித்தாந்தக் கொள்கையை பெரிதும் வலியுறுத்தினர். வங்காளத்தில் இருந்து வந்த இரு பேராளர்கள் பதி, பசு, பாசம் போன்றவற்றை ஆங்கிலத்தில் உரையாற்றினர். அவர்கள் சிவஞான போதம், திருவருள்பயன் போன்ற நூல்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வைத்திருந்ததைக் காணமுடிந்தது.

கனடாவில் ஒன்றரை லட்சத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் வாழ்ந்து வருகின்றார்கள் அவர்கள் ஓய்வு உறக்கம் இன்றி அங்கு வேலைக்கு போக வேண்டிய ஒருநிலை உள்ளது. குடும்பத்தில் உள்ளவர்கள் தீவிரமாக உழைத்தால் தான் அங்கு நாளாந்த வாழ்க்கையை நன்கு ஓட்டமுடிகிறது இதனால் அங்கு குடும்பத்தில் உள்ளவர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. வாரத்தில் ஒரிரு முறைதான் அவர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கக்கூடியதாக இருக்கிறது. கனடாவில் வாழும் ஈழத்தமிழர்களிடையே சீதனமுறை இன்னும் ஒழியவில்லை இன்னும் அது அங்கு வளர்ந்துகொண்டேவருகிறது.

### பெற்றோரை மிரட்டும் பிள்ளைகள்

கனடாவில் பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் ஏதாவது பிணக்கு ஏற்பட்டால் அங்குள்ள பிள்ளைகள் உடன் 911 என்றஎண்ணுக்கு தொலைபேசி எடுத்த மறுகணமே வீட்டு வாசலில் பொலிஸ் ஜீப் வந்துநிற்கும். பொலிஸார் சம்பந்தப்பட்ட பெற்றோரை உடன் கைது செய்ய விசாரணைக்கு உட்படுத்தி மூன்று நாட்கள் கொண்டு போய் பொலிஸ் ஸ்டேசனில் வைத்திருப்பார்கள். அங்கு மூன்று நாட்களும் பிள்ளைகள் வளர்ப்பது எப்படி என்கின்ற பயிற்சியும் அளிக்கப்படுகிறது. பயிற்சி முடிவில் அவர்கள் விடுதலை செய்யப்படுகிறார்கள். இதனால் தங்கள் பிள்ளைகளை பெற்றோர்கள் கண்டிக்க கனடாவில் அஞ்சுகின்றார்கள்.

அண்மையில் கனடாவில் வாழும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 13 வயதுச் சிறுமி ஒருவர் ஓய்வுநேரத்தை கழிப்பதற்காக பெற்றோரின் அனுமதியுடன்கனடா வாசிகளான ‘கயான’ இனத்தைச்சேர்ந்த சினேகிதி ஒருவரின் வீட்டிற்கு சென்றிருந்தார். அன்று இரவு பிள்ளை வீடு வந்து சேராததையடுத்து பெற்றோர் தொலைபேசியில் தொடர்பு கொண்டபொழுது பிள்ளை வீடுவரமறுத்தது. எங்களுடைய கலாச்சாரப்படி பிறர் வீடுகளில்இரவு வேளைகளில் நிற்பது மரபு அல்ல எனவே உடன் புறப்பட்டு வருமாறு பணித்தனர் பெற்றோர்கள். மறுகணம் அந்தப் பிள்ளை சினேகிதியின் உதவியுடன் 911 என்ற இலக்கத்திற்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டது. அதையடுத்து சம்பந்தப்பட்ட பெற்றோர் பொலிசாரால்கைது செய்யப்பட்டு தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். திடீரென பிள்ளைக்கு ஏற்பட்ட மனமாறுதலால் விசாரணையின் பின் சம்பந்தப்பட்ட பெற்றோர் விடுதலையானார்கள்.

### தமிழ் வானொலி

கனடாவின் தலைநகர் ரொறன்ரோவில் தமிழ் வானொலிச் சேவை ஆரம்பிக்கப்பட்டு நல்லமுறையில் இயங்கிவருகிறது. இதில் அந்தர் யோகம் என்கின்ற யோகப் பயிற்சி அண்மையில் இடம்பெற்றது இப்பயிற்சியில் இருநூற்றுக்கு மேற்பட்டோர் கலந்துகொண்டனர். இப்பயிற்சியை தமிழ்வானொலி சேவை வீடியோ படம்பிடித்து வீடியோ படம் மூலம் பிரசாரம் செய்துவருகிறது,

கனடாவில் சுமார் பத்திற்கும் மேற்பட்ட தமிழ் பத்திரிகைகள் தினசரியாகவும், வார சஞ்சிகையாகவும் வெளிவருகிறது. இச்சஞ்சிகைகளில் தாயகச் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது தாயகச் செய்தியில் ஈழத்தின் நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. அங்குள்ளவர்கள் தாயகச் செய்திகளை மிகவும் அவதானமாக படித்து அறிந்து கொள்கிறார்கள் குறிப்பாக ‘ஈழநாடு’ ‘தமிழ்ஈழம்’ ‘ஆத்மஜோதி’ போன்ற சஞ்சிகைகள் அங்கு குறிப்பிடத்தககது. இச்சஞ்சிகைகளில் கலை கலாச்சாரத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

### சைவச் சங்கம்

கனடாவில் இந்துசமய கலை கலாச்சார பண்புகள், அழியவிடாது முன்னெடுத்துச் செல்லும் நோக்கில் சங்கம் ஒன்று அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது, இச்சங்கம் இந்து சமய கலை கலாச்சார பண்புகளை முன்னெடுத்துச் செல்லும் அதேநேரத்தில் சைவச்சிறுவர்களை பாதுகாக்கவும், அதற்கு உடந்தையாக இருப்பதற்கும் அது உறுதி பூண்டுள்ளது,

### சுவிஸில் வாணிவிழா

சுமார் முப்பத்தையாயிரத்திற்கும் மேற்பட்ட ஈழத்தமிழர்கள் வாழும் சுவிஸ் தலைநகரில் வாணிவிழா இம்முறை மிகவும் கோலாகலமாக நடைபெற்றது.

பல்வேறு கலை நிகழ்ச்சிகளை உள்ளடக்கிய இவ்வாணிவிழாவில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் ஒன்றுகூடினர். நூற்றுக்கணக்கான தமிழ் சிறுவர்கள் சிறுமியரின் கலைத்திறன்கள் இந்நிகழ்வின்போது வெளிக்கொணரப்பட்டது, பெரும் தொகையான சுவிஸ் நாட்டவர்களும் இக்கலைநிகழ்ச்சிகளைப் பார்த்துப் பெருமிதம் அடைந்தனர்,

இந்நிகழ்வில் சுவிஸ்நாட்டைச் சேர்ந்த பிரதிநிதி ஒருவர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு அங்கு உரையாற்றுகையில்,

நீங்கள் என்றோ ஒரு நாள் இங்கிருந்து உங்கள் நாட்டிற்குப் போகவேண்டிவரும் நீங்கள் எங்கிருந்தாலும் உங்கள் பண்பாடுகளை எந்தச்சந்தர்ப்பத்திலும் எங்கும் மறந்துவிடாதீர்கள். உங்கள் கலைத்திறன்களை அதற்கு இணைந்தாற்போல் இசையுடன் மிகவும் பக்திமார்க்கமாக எடுத்தியம்புவதைப் பார்த்து பெரிதும் மகிழ்ச்சி கொள்கின்றேன் என்றார்.

### கோவில் கும்பாபிஷேகம்

சுவிஸில் உள்ள ஈழத்தமிழர்கள் ஒன்றுகூடி நிதிதிரட்டி அதன்மூலம் கண்ணன்கோவில் ஒன்றை அமைத்து அண்மையில் குடமுழுக்குச் செய்தனர். ஈழத்துக் கட்டடக் கலைஞர்களால் அமைக்கப்பட்ட இவ் ஆலயத்தில் ஈழத்தின் தலைசிறந்த சிவாச்சாரியர்கள் கலந்துகொண்டு கும்பாபிஷேகத்தைச் செய்துவைத்தனர். பலஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்ட இவ்வைபவத்தில் மங்கள இசைக்கச்சேரியும் இடம்பெற்றது.

சிங்கப்பூர், சுவிஸ், கனடா இந்தோனேஷியா போன்ற நாடுகளில் தமிழ் சிறார்களுக்கான தமிழ் வகுப்புக்கள் வாரம் இருமுறை பிரத்தியேகமாக நடைபெற்றுவருகிறது, பெற்றோர்கள் ஆர்வத்துடன் தமது பிள்ளைகளை தமிழ் மொழியை கற்றுக் கொள்வதற்காக அனுப்பிவருகின்றார்கள்.

இந்தோனேசியாவில் பூசையின் ஒரு அங்கமாக தியானத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது இங்கு திருமண முறையில் சீதனம் கொடுப்பதில்லை இது எமது பண்டைய மரபிலும் இருந்துள்ளது. சுந்தரர் கல்யாணம் மற்றும் கந்த புராணத்திலும் இது இடம் பெறுகிறது.

வெளிநாடுகளில் சாயி வழிபாடு சிறந்தமுறையில் நடைபெறுகிறது சத்திய சாயிபாபாவின் வழிபாட்டில் பஜனை மூலம் ஒரு எழுச்சி உருவாகி வருகிறது.

### தமிழ் வளர்க்கும் தமிழீழம்

சுவிஸில் இருந்தபொழுது தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு அழைப்பு வந்தது. பல்வேறு சூழ்நிலைகளால் நான் இம்மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை. இங்கு வந்த பின்புதான் மாநாட்டில் கலந்து கொள்ளாததையிட்டு பெரும் மகிழ்ச்சியடைந்தேன். ஈழத்துத் தமிழ் அறிஞர்கள் பலர் மாநாட்டில் பங்குபெற்ற அனுமதிக்கப்படாது நாடுகடத்தப்பட்டுள்ளார்கள். இங்கு தமிழ் வளர்ப்பதற்கு இது ஒரு சந்தர்ப்பம், தமிழ் ஈழம் தமிழனுக்கு வழிகாட்டியாக வருவதற்கு இதுதான் அத்தாட்சி.

வெளிநாடுகளில்வாழும் ஈழத் தமிழர்கள் பலர் தாயகம் திரும்புவதையே பெரிதும் விரும்புகின்றார்கள். (155-சி)

## இராசி பலன்

14-1-1995

சனிக்கிழமை

**(தமிழுக்கு மார்கழி 30)**

திரயோதசி ந. இ. 11.58 வரை: மிருகசீரிடம் ந, இ. 12.39 வரை; சித்தயோகம் இராகுகாலம் காலை 9-34 முதல் 11.04 வரை. சுபநேரம் மாலை 3-34 முதல் 5-04 வரை: சனிப்பிரதோச விரதம்.

மேடம்- மேலதிகாரிகள் சகாயம், பணிவிடை, தந்திரோபாயம்

இடபம்- எதிரிகள்வேதனை, காரிய தாமதம், குதர்க்க வாதம்

மிதுனம்- சயனசுகம், இனசன மகிழ்ச்சி, உல்லாசம்

கடகம்- மனத்துயர், குடும்ப விவகாரம், பணமுடை

சிங்கம்- தொழில் லாபம், சகோதர உதவி, பயணம்

கன்னி- உள்ளக் குமுறல், நற்செய்தி, வேலைப்பழு

துலாம்- பிரிவுத்துயர், தப்பபிப்பிராயம், சுபவிரயம்

விருச்சிகம்- வீண் பழி, தொழில் பாதிப்பு, வேதனை

தனுசு: புதிய மாற்றம், தொழில் பெருமை, மாமனார் உபதேசம்

மகரம்: கூடிப்பேசுதல் கற்பனை மிகுதி, தானதர்மம்

கும்பம்- ஏக்கமடைதல் பெரியோர் பகை, அகால உணவு

மீனம்- பிறர் கொடுமை, உடல் உபாதை கண்டனம்

**ஜோஸ்யர்**

## பலதும் பத்தும்

### சில்லாலையிலும்...!

பாப்பரசர் கொழும்புக்கு வரும்போது... போதகர் யோசேப் வாஸ் கௌரவிக்கப்படுவது முக்கிய நிகழ்ச்சியல்லவா?

கத்தோலிக்கம் வளர்த்தவர்கள் போர்த்துக்கேயர்கள். ஒல்லாந்தரால் கத்தோலிக்கருக்குக் கஷ்ட காலம். 1651ல் இந்தியாவில்... பிராமண குலத்தில் பிறந்து கத்தோலிக்கரானவர்தான் யோசேப் வாஸ். இவர்... 1687ல்... கப்பலோட்டிபோல மாறுவேடத்தில் இலங்கை வந்து போதனை புரிந்தார்.

இதனை எப்படியோ அறிந்துவிட்டார்கள் ஒல்லாந்தர். அதனால் பிச்சைக்காரர் வேடத்தில் சுவிஷேஷச் சுற்றுப் பயணம் செய்தார். கண்டி அரசன் இரண்டாவது விமலதர்ம சூரியன் அழைக்க... அங்கு சென்று — மழைக்காகப் பிரார்த்திக்க மழை பொழிந்ததாம்!

1688-89 காலப் பகுதியில் ...குட்டி ரோமாபுரி எனப் பெயர் பெற்ற சில்லாலையிலும் பங்குத் தந்தையாகி... அப்போஸ்தலிக்கச் சேவையாற்றினாராம்!

— மயூரன்

வீட்டிலே தோட்டம் செய்தால்
நாட்டிலே பசி தீரும்.

வடபகுதிக்கு

## கூடுதல் உணவுப்பொருள் அனுப்ப நடவடிக்கை

(கொழும்பு)

வடபகுதிக்கு மேலும் கூடுதலான உணவுப் பொருட்களை அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பத்தாயிரம் மெ. தொன் சீனி, 250 மெ. தொன் பருப்பு, 2,50,000 பாலுணவு ஆகியன யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்படுவதாக கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத் தலைவர் எஸ். ஜி. சிறிசேன தெரிவித்துள்ளார். -ரி

## பாப்பரசருக்கு எதிராக பிக்குகள் போர்க்கோலம்

– இன்றும் நாளையும் எதிர்ப்புக் கூட்டம் –

(கொழும்பு)

இலங்கை வரும் பாப்பரசரின் வருகையை புறக்கணிப்பதில் பௌத்த மக்களின் ஆதரவை திரட்டும் முயற்சியில் பௌத்த பிக்குகள் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள்.

இன்றும் நாளையும் காலி, மாத்தறை, மொறட்டுவ போன்ற இடங்களில் பொதுக் கூட்டங்களை நடாத்தி பாப்பரசருக்கு எதிராக தாம் மக்களை திரட்டப்போவதாக பௌத்தபிக்குமார் சங்கம் தீர்மானித்துள்ளது.

புத்தசமயம் குறித்து பாப்பரசர் தமது புத்தகத்தில் குறிப்பிட்ட கருத்துக்கு அவர் நேரடியாக மன்னிப்பு கேட்காதவரை தாம் ஓயப்போவதில்லை என மூர்க்கத்தனமாக பௌத்தபிக்குகள் சங்கம் எச்சரித்துள்ளது. -ரி

## காங்கேசன்துறையில் உணவுக்களஞ்சியம்

(கொழும்பு)

காங்கேசன்துறையில் கூ. மொ. வி. ஸ்தாபனத்தின் உணவுக் களஞ்சியம் ஒன்றை திறப்பதற்குநடவடிக்கைஎடுக்கப்பட்டு வருகிறது.

வடபகுதி விவசாயிகள் தமது உற்பத்திப் பொருட்களை தென்பகுதிககு அனுப்புவதற்கு உதவும் வகையில் விசேடதிட்டம் ஒன்றும் ஆரம்பிக்கப்படவுள்ளது. -ரி

ஆனையிறவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மைப்பு வேலைகளைச் செய்வதற்கு இயந்திர சாதனங்களை கொண்டு செல்லவேண்டிய தேவை உள்ளதால் ஆனையிறவுப்பாதை பற்றி விசேடமாக ஆராயப்படும் என்றும் அவர் தெரிவித்தார், -ரி

## பாப்பரசரை பகிஷ்கரிக்க கொழும்பில் சுவரொட்டி

(கொழும்பு)

எதிர்வரும் 20-ந் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள பரிசுத்த பாப்பரசர் 2-வது அருளப்பர் சின்னப்பரின் வருகையை பகிஷ்கரிக்குமாறு கொழும்பில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒருசில பௌத்த அமைப்புகள் இந்த சுவரொட்டிகளை ஒட்டியுள்ளதாகவும் பாப்பரசருக்கு எதிரான எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பௌத்தமதத்திற்கு எதிராக பாப்பரசர் அண்மையில் தெரிவித்த கருத்துக்களை கண்டித்தே இவ் எதிர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாப்பரசர் கலந்துகொள்ளும் உத்தியோகபூர்வ வைபவங்களுக்கு ஊறுவிளைவிக்காத வண்ணம் இவ் எதிர்ப்பு நடவடிக்கைகளை நடாத்துவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு ஜனநாயக ரீதியில் பாதுகாப்பு வழங்கப்படுமெனபிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த தெரிவித்தார். -இ-ரி

அரசு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது.

இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள அரசு புலிகள் பேச்சுவார்த்தை பற்றியும் அதில் தெரிவிக்கப்பட்டது இ

## பாப்பரசர் வருகைக்கு பலத்த பாதுகாப்பு

(கொழும்பு)

பாப்பரசர் வருகையையொட்டி கொழும்பில் பொலிசார் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

பாப்பரசரின் வருகையின் போது கொழும்பு வாழ் மக்கள் கடைப்பிடிக்கவேண்டிய ஒழுங்குகள் பற்றி பொலிசார் துண்டுப்பிரசுங்கள் மூலம் மக்களுக்கு அறிவித்து வருகின்றனர். -ரி

## யுத்தத்தை நிறுத்தக்கோரி சமாதானப் பேரணிகள்!

[கொழும்பு]

வடக்கு-கிழககுயுத்தம் முடிவுக்கு கொணடுவரப்பட்டு நாட்டில் சமாதானமும் சௌஜன்யமும்நிலவவேண்டும் எனக்கோரி தென்பகுதியில் சமாதான ஊர்வலங்களும் கருத்தரங்குகளும் இடம்பெறுகின்றன.

தற்போதைய பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவியேற்றது முதல் மேற்படி சமாதான ஊர்வலங்கள் அதிகளவில் இடம்பெற்று வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாத்தறை மக்களால் சமாதானப் பேரணி ஒன்றும் கூட்டம் ஒன்றும் கடந்தவாரம் நடத்தப்பட்டது

யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டுமென்ற கோஷங்களைகொண்ட பதாகைகளை தாங்கியவாறு பெருமளவு மக்கள் ஊர்வலத்தி கலந்து கொண்டனர்.

அரசியல்தீாவு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுவார்த்தையை மாதக் கணக்கில் நடத்துவது அரசின்எண்ணமல்ல உடனடியான அரசியல் தீர்வே அரசின் நோக்கமாகும்.

யாழ்ப்பாணத்தில் அரசு பிரதிநிதிகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் மூன்றுவது கட்டப் பேச்சுவார்த்தையின் போது அரசியல் தீர்வுபற்றி பேசுவதற்கான திகதி நிர்ணயம் செய்யப்படும்.

உள்ளூரில் அவ்வப் பகுதிகளிலிருக்கும் இராணுவத் தளபதிகளும், விடுதலைப் புலித தளபதிகளும் ஒருவரோடு ஒருவர் தொடர்புகொள்ள செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடு நல்ல வெற்றியளிககிறது.

இந்த நிலையில் கண்காணிப் குழுக்களுக்கு எந்த வேலையும இருக்காது. என்றும் அமைச்சர் ரத்வத்தமேலும் தெரிவித்தார். இ-ரி

★ தமிழகமீனவர்களால்

## 4 இலங்கை மீனவர் காப்பாற்றப்பட்டனர்

[கொழும்பு]

இந்திய கடலோர பகுதியில் மீன்பிடித்துக்கொண்டிருந்த போது காணமல் போன 4 இலங்கை மீனவர்கள் தமிழக மீனவர்களால் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை கன்னியா குமரிக் கடற்பிராந்தியத்தில் மீன்பிடித்துக்கொண்டிருந்தபோதுமேற்படி நான்கு பேர் பயணம் செய்த படகுகள் விபத்துக்குள்ளானதில் இந்நால்வரும் கடலில் வீசப்பட்டனராம்.

இதனையடுத்து இம் மீனவர்கள் நால்வரும் தமிழக மீனவர்களால் காப்பாற்றப்பட்டனராம். (க-ரி)

## வடபகுதி கண்காணிப்புகுழு வாரஇறுதியில் இயங்கும்!

(கொழும்பு)

யாழ்ப்பாணம், மன்னார் வவனியா, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளுக்கான கண்காணிப்புக்குழுக்கள் இவ்வார இறுதியில் இயங்கும் என்றும் இக்குழுக்களுக்கு கனேடிய நெதர்லாந்து நாடுகளின் பிரதிநிதிகள் தலைமை தாங்கவிருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் மட்டக்களப்பு, அம்பாறை, திருமலை ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்ட கண்காணிப்புக்குழுக்களுக்கு நோர்வே நாட்டுப் பிரதிநிதிகள் தலைமை தாங்குவதாகவும் இக்குழுக்கள் நேற்று தமது கடமைக்காக அவ்வப் பகுதிக்காக சென்றுள்ளதாம்.

இக்குழுக்களில் விடுதலைப் புலகள் தரப்பு பிரதிநிதிகள் அங்கம் வகிப்பதும் குறிப்பிடத்தக்கது. (க-ரி)

மட்டு வாகரை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மட்டு-அம்பாறை துணை தளபதி ராபேட், வாகரை பிரதேச தளபதி சுது, மட்டக்களப்பு - அம்பாறை அரசியல் பொறுப்பாளர் பாபு, மற்றும் மதி ஆகியோரும் இப்பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டனர்.

சுமார் ஒரு மணிநேரம் இச்சந்திப்பு இடம் பெற்றதாகவும் போர் இடைநிறுத்தத்தைத் தொடர்ந்து பேணுவதற்குரிய வழிவகைகள் குறித்தும் இருதரப்பினராலும் கருத்துப் பரிமாற்றம் செய்யப்பட்டது. க-ரி

வடபகுதி

[1ம் பக்கத் தொடர்ச்சி)

குழுவின் தலைவரான அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ஹப்பித்த பெர்ரேரா, ஜனாதிபதியின் செயலர் கே. பலபத்த பென்டி, திரு. நவீன் குணரத்தின, திரு. ராஜன் ஆசீர்வாதம். திரு. சுரேன் விக்கிரமசிங்க மற்றும்புனர்வாழ்வு அதிகாரிகள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

வடபகுதி அபிவிருத்திக்கு நிதி திரட்டல், பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வு அளித்தல், உற்பத்தியை மீள ஆரம்பித்தல், கல்வி சுகாதார துறைகள் புனரமைத்தல், பொது போக்குவரத்துச்சேவையை வழமைக்குக் கொண்டுவரல், தேசிய சொத்தைப் பேணல், அரச நிர்வாகத்தை பலப்படுத்தல், உணவுப் பொருட்களை தடையின்றி விநியோகித்தல், பாதுகாப்ப போன்ற விடயங்கள் குறித்தும் இக்கூட்டத்திம் ஆராயப்பட்டது. -க-

கோமாரி நாளை வருகிறது

(யாழ்ப்பாணம்)

கொழும்புத் துறைமுகத்திலிருந்து வடபகுதிக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை ஏற்றிக்கொண்டு கோமாரிக் கப்பல் பருத்தித் துறை நோக்கிப் புறப்பட்டுள்ளது,

இக்கப்பல் நாளை 15-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பருத்திதுறை துறைமுகத்தை வந்துசேருமென எதிர்பார்க்கப்படுகிறது, -162

அரசியல்அதிகார

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முதல்வாரத்தில் இத்திட்டம் தயாராகிவிடும் எனவும் பிரதி பாதுகாப்பமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளையில் விடுதலைப் புலிகளுக்கும் அரசபிரதிநிகளுக்கும் இடையிலான மோதல தவிர்ப்பு ஒப்பந்தம் 6 வது நாளாக எதுவித அசம்பாவிதங்களும் இன்றி தொடர்ந்ததாகவும், வடக்கு-கிழக்கு பகுதியில் சிறு சிறு சம்பவங்கள் மட்டுமே இடம் பெற்றதாகவும் பெரிதுபடுத்தக் கூடியதாக ஏதுவும் இல்லையென்றும் தெரிவித்தார்.

தடைசெய்யப்பட்ட பகுதிகளில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் போன்ற சிறு சிறு சம்பவங்க்ள் இருதரப்பினரையும் சேர்ந்த வெளிக்கள தளபதிகளினல் பேசித்தீர்க்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

வடக்கு- கிழக்குப் பகுதிகளில் இருதரப்பையும் சேர்ந்த பிரதேச வெளிக்கள தளபதிகள் அனேகமாக நேரடியாக சந்தித்து கருத்துக்களை பரிமாறிக்கொண்டதாகவும் தெரிவித்தார்.

மீறல்கள் இல்லாமல் மோதல் தவிர்ப்பை பேணுவதில் இருசாராரும் உறுதி பூண்டுள்ளதாகவும் தெரிவித்தார். க-ரி

அரசியலிவ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ணல் அனுருத்த ரத்வத்த தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,-

உத்தேச பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வதற்காக விடுதலைப்புலிகள் பிரதிநிதிகள் கொழும்பிற்கு அழைக்கப்படுவார்கள் என்றும் தெரிவித்தார். -க-ரி

ஜே. ஆர்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமரின் உத்தியோகபூர்வவாசஸ் தலமான அலரி மாளிகையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

ஜனாதிபதி சந்திரிகாவை தாம் சந்திக்க வேண்டுமென்று திரு. ஜே.ஆர். ஜெயவர்த்தன முன்னர் கோரிக்கை ஒன்றை விடுத்திருந்தார். இதனையடுத்தே இந்த சந்திப்பு இடம் பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஜெயவர்த்தன கலாசார நிலையத்தின் நடவடிக்கைகளை திரு. ஜெவர்த்தன இந்தச் சந்திப்பின்போது ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எடுத்து விளக்கினர்.

தற்போதைய ஜனாதிபதி இந்த நிலையத்தின் காப்பாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

மூன்றும்கட்ட

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தத்தை நீடிப்பது தொடர்பாக இன்றைய பேச்சுக்களின் போது விடுதலைப்புலிகளால் அரச தரப்பினருடன் கலந்துரையாடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் - அரச பிரதிநிதிகளுக்கும் இடையிலான மூன்றும் கட்டப் பேச்சுவார்த்தைகள் இன்று சனிக்கிழமை யாழ். நகரில் நடைபெறவுள்ளன.

இன்றுகாலை 9 மணிமுதல் மாலைவரை பேச்சுவார்த்தைகள் நடைபெறும். இதில் அரசு தரப்பில் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்ட ஜனாதிபதியின் செயலாளர் பாலபத்த பெண்டி, பிரிகேடியர் சிறிபீரிஸ், கப்டன் பிரசன்ன இராஜரட்ண, ராஜன் ஆசீர்வாதம், நவீன் குணரட்ண ஆகியோரும் தமிழீழ விடுதலைப் புலிகள் சார்பில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு. ப, தமிழ்ச்செல்வன், அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலன், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் ரவி, தமிழீழ நிர்வாக சேவைப் பொப்பாளர் டொமினிக், யாழ்.மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் இளம்பரிதி ஆகியோரும் கலந்து கொள்கின்றனர்,

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு ஜனவரி மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/B-